Koviloor Acadamy

ஸ்ரீராம நாமத் திருப் பதிகம்.

மலர் 9.

Acc. No. 46040

KOVILOOR ... A. ... 46040

விபவஹூ

சித்திரா பௌர்ணமி உற்சவ

சமயத்தில்

பர்மா சமரச சன்மார்க்கப் பிரசாரகமாக

தென்காஞ்சி,

சாமிவேல் பவர் அச்சியந்திரசாலையில் அச்சிட்டு

வினியோகிக்கப்பெற்றது.

1928.

Koviloor Academy

உலகெலாம்வாழ்க
வீர. பழனியப்பசெட்டியார்
புதுவயல்
இராமநாதபுரம் ஜில்லா

தெளிந்து தெறித்தல்.

24/6

ஆராய்ந்து தெளிந்த கருத்தினை நயம்பட எடுத்துரைக்கும் நா நலமும், கலங்காத மனத்திண்மையையும் அருங்குணமாகக் கொண்டிருந்த வடலூர் திருவருட்பிரகாஸ வள்ளலாரெனும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் இத்திருப் பதிகத்தைத் திருவாய் மலர்ந் தருளினர். இத்திருப் பதிகத்தில் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் அளிக்கும் பான்மைகளைச் செம்மைசான்ற நெறியில், சொல்லும் பொருளும் பொன்போல் இலங்கக்காணலாம். மதி நலமும் மாண்பு வாய்ந்த நூலறிவும் கொண்டிருந்த அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருணைத் தலைவனாகிய இவர், தமிழ் மக்களைச் சமரச சன்மார்க்க வழிப்படுத்தும் நன்னோக்குடன் ஸ்ரீராம பிரானின் உபாஸனையும் பிரார்த்தனையும் தமிழ்ச் செல்வர்களிடை பெருகுமாறு, இத்திருப்பதிகத்தை இயற்றி தமது தெய்வத் தமிழ் மறையாகிய திருவருட்பாவில் அறிவுறுத்திப் போந்தனர். விபவஹு சித்திரா பௌர்ணமி விழாவின் சமயம், குழுமியாகும் தமிழ் மக்கள், சிறிநெறிசேர்ந்து சிந்தையைச் சிதையுறப் பிணிப் பனவாம் பேதமையென்ற கண்காட்சியில் மட்டும் அலைவுறு வண்ணம், அறநெறியை அறிவுறுத்தி நல்வழிபடுத்தும் இயல் பிற்கு, இத்திருப்பதிகம் தன் அருந்திறமை கொண்டிருக்குமெனக் கருதியே, பொதுஜன சேவையில் மனத்திண்மை கொண்டுள்ள லாயர் திரு. சண்முகம் பிள்ளை யவர்கள் முதலிய கனதனவான் களின் பொருளீட்டினால், அச்சிடப்பெற்று இலவசமாக விநியோ கித்துள்ளது. அன்பர்கள் பாராயணித்து இன்புற்று செல்வமும் சிறப்பும் இனி திலங்கும் இயல்பை ஸ்ரீராமபிரான் அளிக்குமாறு பிரார்த்திக்கும்.

இரங்கோன்
4-5-1928.

அற்புதானந்த சுவாமி,
சமரச சன்மார்க்க பிரசாரகர்.

Koviloor Acadamy

உ

எழுசீரடியாசிரிய விருத்தம்.

காராய வண்ண மணிவண்ணா கண்ணா கனசங்கு சக்ர தாளே
சீராய தூயமலர் வாயநேய ஸ்ரீராம ராம வெனவே
தாராய வாழ்வு தருசெஞ்ச சூழ்க தாமோதராய நமவோம்
நாராயணாய நமவாமனாய நமகேசவாய நமவே.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

திருமகளாம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங் கனியே கொழும்பாகே தேனே தெய்வத்
தருமகனைக் காத்தருளக் காத்தே வென்றித்
தனுவெடுத்த ஒருமுதலே தருமப் பேறே
இருமை யுமென்னுளத் தமர்ந்த ராம நாமத்
தென்னரசே யென்னமுதே யென்தாயே நின்
மருமலர்ப் பொன்னடி வழுத்துஞ் சிறியேன் அந்தோ
மனந் தளர்ந்தேன் அறிந்தும் அருள் வழங்கிலாயே. (1)

கலைக் கடலே கருணை நெடுக்கடலே கானங்
கடந்த தடக்கடலே யென் கருத்தே ஞான
மலைக் கொழுஞ் சுடரே வான்சுடரே யன்பர்
மனத் தொளிருஞ் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கணுறு மகுட சிகாமணியே வாய்மைத்
தசரதன் தன்குலமணியே தமியேன் உள்ள
நிலைக்கணுறுஞ் ஸ்ரீராம வள்ளலே யென்
நிலையறிந்தும் அருளின்னு நினைந்திலாயே. (2)

மண்ணாள நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாளவேண்டேன்
விண்ணாள நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் திருவருளே வேண்டி நின்றேன்
புண்ணாள நின்ற மனமுடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணாள கடற் கமலக் கண்ணா என்னைக்
கைவிடிலென் செய்வேனே கடையனேனே. (8)

Koviloor Acadamy

தெய்வினையார் அரக்கர்குலஞ் செற்ற வெற்றிச்
சிங்கமே யெங்கள் குலதெய்வ மேயோ
வெவ்வினை தீர்த்தருள் கின்ற ராம நாம
மியன் சுடரே யிவ்வுலக விடயக்காட்டில்
இவ்வினையேன் அகப்பட்டேன் புலனாங் கள்வர்க்
கிலக்கானேன் துணையொன்று மில்லேன் அந்தோ
செய்வினை யொன் றறியேனிங் கென்னை யெந்தாய்
திருவுளத்திற் சேர்த்திலையோ செய்வதென்னே. (4)

வான் வண்ணக் கருமுகிலே மழையே நீல
மணி வண்ணக் கொழுஞ்சுடரே மருந்தே வானத்
தேன் வண்ணச் செழுஞ்சுவையே ராம நாமத்
தெய்வமே நின்புகழைத் தெளிந்தே ஓதா
ஊன் வண்ணப் புலைவாயர் இடத்தே சென்றுங்
குழைக்கின்றேன் செய்வகை யென்றுணரேன் அந்தோ
கான் வண்ணக் குடும்பத்திற் கிலக்கா என்னைக்
காட்டினையே யென்னே நின் கருணையீதோ. (5)

பொன்னுடையார் வாயிலிற்போய் வீணே காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய் நின்னடியை மறந்தேன் அந்தோ
என் செய்கேன் என் செய்கேன் ஏழையேனுன்
பின்னுடையேன் பிழையுடையேன் அல்லாலுன்றன்
பொருளும் உடையேனோ பிறந்தேன் வாளா
உன்னுடைய திருவுளத்தென் னினைதியோ வென்
ஒருமுதல்வா ஸ்ரீராம வுணர்கிலேனே. (6)

அறம்பழுக்குந் தருவே யென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங் கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கையிரா வணனைப் பண்டோர்
வாளியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்குஞ் ஸ்ரீராமவள்ளலே நின்
திருவருளே யன்றி மற்றோர் செயலிலேனே. (7)

Koviloor Acadamy

...ன் மனைத்தார் தம்பாற் சென்றே
கண் கலக்கங் கொள்கின்றேன் கவலை வாழ்வை
எல்லாமுள் ளிருக்க நிந்தா யன்றோ சற்றும்
இரங்கிலை யெமபெருமானே யென்னே யென்னே
பொல்லாத வெவ்வினையேன் எனினும் என்னைப்
புண்ணியனே புரப்பதருட் புகழ்ச்சியன்றோ
அல்லார்ந்த துயர்க் கடலின் றெடுத்திடாயேல்
ஆற்றேனுன் பழி நின்பால் ஆக்குவேனே. (8)

மையான நெஞ்சகத்தோர் வாயில் சார்ந்தே
மனநதளர்ந்தேன் வருந்துகின்ற வருந்தமெல்லாம்
ஐயா வென்னுளத் தமர்ந்தாய் நீதான் சற்றும்
அறியாயோ வறியாயேல் அறிவாரியாரே
பொய்யான தன்மையினேன் எனினு மென்னைப்
புறம்விடுத்தல் அழகேயோ பொருளாய் எண்ணி
மெய்யா வென்றனை யந்நாள் ஆண்டா யிந்நாள்
வெறுத்தனையேல் எங்கே யான்மேவு வேனே. (9)

கூறுவதோர் குணமில்லாக் கொடிதாஞ் செல்வக்
குருட்டறிவோர் இடைப்படுமென் குறைகளெல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனுங் கருங்கடலில் அழுந்துகின்றேன்
ஏறுவதோர் வகையறியேன் எந்தா யெந்தாய்
எற்றுகின்றோர் நின்னையன்றி இல்லேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ வுன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறியனேனே. (10)